## சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது) செயல்முறைகள்

### முன்னிலை திருமதி, ர, ராஜலட்சுமி. B.E.,

ந.க. அ3/6090/2019 நாள் 13.07. 2019

| | |
|---|---|
| பொருள்: | தமிழ்நாடு அமைச்சுப்பணி – சென்னை மாவட்ட வருவாய் அலகு – நேரடி நியமனத்திற்குட்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு– IV தொகுதி IV 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆண்டிற்கான காலியிடம் பூர்த்தி செய்வது – சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பணியிடம் ஒதுக்கீடு வரப்பெற்றது – பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்வது - தொடர்பாக |
| பார்வை: | 1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண் 1484/PSD-B/2019, நாள் 20.02.2019.<br>2. சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது) செயல்முறைகள் ந,க,எண், அ2/6090/2019. நாள் 01.03.2019. |

--------

**ஆணை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ம் ஆண்டிற்குரிய காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனத்திற்குட்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு– IV தொகுதி IV-ற்கான சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III தட்டச்சர்களாக தேர்வு செய்யப்பட்டு பார்வை-1ல் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தின் வாயிலாக சென்னை மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டனர். பார்வை-2ல் குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறைகளின்படி பணிநியமனம் வழங்கப்பட்டுள்ள கீழ்கண்ட 2 சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III தட்டச்சர்களின் பணியினை அவர்களது பெயர்களுக்கு எதிராக குறிப்பிட்டுள்ள பணியில் சேர்ந்த நாள் முதல் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை சிறப்பு விதிகளில், விதி 23(a)(i)ன் படி பணி வரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

Scanned with CamScanner

| வ, எண், | திருவாளர்கள் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | B. கிருஷ்ண பிரியா,<br>சுருக்கெழுத்து தட்டச்சர், நிலை-III<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது),<br>மாவட்டாட்சியர் அலுவலகம். | 04.03.2019 மு,ப | 04.03.2019 மு,ப |
| 2 | E. ராதிகா,<br>சுருக்கெழுத்து தட்டச்சர், நிலை-III<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (ந.நி.வ)<br>பணியமர்த்தப்பட்டு<br>மாற்றுப்பணியில் மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம்,<br>மாவட்டாட்சியர் அலுவலகம். | 04.03.2019 மு.ப | 04.03.2019 மு.ப |

2. இந்த பணிவரன்முறை ஆணை, இத்தேர்விற்கு உட்பட்ட நீதிமன்ற வழக்குகளின் இறுதி ஆணைக்கு உட்பட்டது ஆகும்.

இவ்வாணை சம்மந்தப்பட்ட பணியாளர்களின் முதுநிலைக்கு உட்பட்டதல்ல.

பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தனியர்களின் தகுதிகாண் பருவம் தொடங்கப்பட்டது எனவும் ஆணையிடப்படுகிறது.

3. தனியர்களின் பணிப் பதிவேட்டில் பணி வரன்முறை தொடர்பான பதிவுகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-ர.ராஜலட்சுமி,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியர் (பொது)

/ஆணைப்படி/

13/7/19

அலுவலக மேலாளர்(பொது)

13.7.19

பெறுநர்
சம்பந்தப்பட்ட நபர்கள்.

நகல்.
1.மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (ந.நி.வ), சென்னை-1
2. நேர்முக உதவியர்கள் - மாஆ/மாவஅ/மாஆநேமுஉ (பொது)
3. கோப்பு

Scanned with CamScanner